ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

---o---

जाता विप्रकुले पवित्रनिगमे स्मृत्यां च बद्धादराः
कार्याकार्यविवेकपूर्वमनिशं धर्म्ये प्रवृत्ताः पथि ।
पापे भीतियुता गुरौ च जगतां श्रीचन्द्रमौळौ तथा
सद्भक्तिं दधतो वसन्ति भुवि ये तेभ्यो महद्भ्यो नमः ॥

उपपत्राधिपः ।

அந்தணர் வம்சத்தில் ஜன்மாவைப்பெற்று சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் திருடமான நம்பிக்கையுடையவர்களாயும் இது நல்லகார்யம், இது கெட்டகார்யம், இது பாபம், இது புண்யம் என்கிற பகுத்தறிவுடன் எப்பொழுதும் தர்மமார்க்கத்தில் ஸஞ்சரிப்பவர்களும்பாபத்தில் பயத்தையடைந்தவர்களும் லோககுருவான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாளிடமும் சந்திரகலையை சிரஸ்ஸில் தரிக்கும் ஸ்ரீ பரமேசுவரனிடத்திலும் சிறந்தபக்தியை தரிப்பவர்களுமாக எவர்கள் இவ்வுலகில் வஸிக்கிறார்களோ அவ்வித மஹான்களுக்கு வந்தனம்.

இதினால் வேதியர்களுக்கு இயற்கையிலிருக்கவேண்டிய கடமைகள் அறிவிக்கப்படுகின்றன. சுருதி, ஸ்மிருதி முதலான பிரமாணங்களில் அதிக ஆதரவும் அவைகளிற்கூறிய கர்மாக்களை விதிவழுவாது அனுஷ்டிப்பதில் அதிக சிரத்தையும் இருக்கவேண்டும். பின்னும் எவ்விதக் கெட்டகார்யத்தையும் தைர்யமாய் செய்யத்துணியாமல் சாஸ்திரங்களை நன்கு ஆராய்ச்சிசெய்து செய்யக்கூடாதென்று கூறப்படும் கர்மாக்களை விலக்கி அவரவர்களுக்கு அவசியம் அனுஷ்டிக்கவேண்டியதாக விதிக்கப்பட்ட ஸ்வதர்மங்களைக் கைவிடாமல் நடத்தவேண்டும். ஆசார்யபக்தியையும் ஈசுவரபக்தியையும் ஒருக்காலும் விடாமல் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் அவர்கள் கடமையைச் சரியாய்நடத்தும் பிராமணர்களே சிறந்தவர்கள். இவர்களை நமஸ்கரிப்பதால் நாம் விசேஷமான சிரேயஸ்ஸைப்பெறலாம். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(உ௪௬-வது பக்கத்தொடர்ச்சி.)

समस्तलिङ्गदेहेषु सूत्रवन्मणिपङ्क्तिषु ।
व्याप्य स्थितत्वात्सूत्रात्मा प्राणनात्प्राण उच्यते ॥

முத்துப்பங்க்திகளில் கோக்கப்பட்ட நூலானது எப்படி எல்லாமுத்துக்களிலும் ஸம்பந்தப்பட்டிருக்கின்றதோ அவ்விதம் இந்த ஹிரண்யகர்ப்பரானவர் ஸகலமான லிங்கசரீரங்களிலும் ஸம்பந்தித்திருப்பதால் இவரை ஸூத்ராத்மா என்றும், எல்லாருடைய பிராணஸ்வரூபமாயிருப்பதால் இவரைப் பிராணன் என்றும் கூறுகிறார்கள். இதுதான் சைதன்யத்திற்கு ஸமஷ்டி ஸ்தூலத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாயிருப்பதால் ஸூக்ஷ்மசரீரமென்று சொல்லப்படும். விக்ஞானமயம் முதலான மூன்று கோசங்களும் ஜாக்ரத்வாஸனாமயமாயிருப்பதால் ஸ்வப்னத்தில் ஜாக்கிரத்காலீந ஸூக்ஷ்ம விஷயங்களை யனுபவிக்கிறான். ஆகையால் தான் ஸ்தூலப்பிரபஞ்சத்தினுடைய லயஸ்தானமாகக் கூறப்படுகின்றது. இவ்விதமிருக்கும் வியஷ்டி உபஹித சைதன்யத்தை தைஜஸன் என்று சொல்லுகிறார்கள். தேஜோமயமான அந்தக்கரணோபஹிதனாயிருப்பதால் தைஜஸன் என்று பெயர் வந்தது. தைஜஸன், ஸூத்ராத்மா இவ்விருவர்களும் ஸ்தூலசரீரத்திற்கு லயஸ்தானமான ஸ்வப்னகாலத்தில்மனோவிருத்திகளால்ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கிறார்கள். இந்த விடத்திலும் ஸமஷ்டி, வியஷ்டிக்கும் இவைகளால் உபஹிதமான ஸூத்ராத்மாவிற்கும்,

தைஜஸனுக்கும் வனம், விருக்ஷம் இவைகளைப்போலும், இவைகளில் அவச்சின்னமான ஆகாயத்தைப்போலும், ஸமுத்திரம் ஜலம் இவைகள்போலும் இவைகளில் பிரதிபிம்பிதமான ஆகாசம் போலும் அபேதமெனக் கொள்ளவேண்டும்.

ஸ்தூலப்பிரபஞ்ச நிருபணம்.

பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்களை ஸ்தூல பூதங்களாக வியவகரிக்கின்றார்கள். பஞ்சீகரணம் எவ்விதம் செய்யப்பட்டதென்பதற்கு அடியில் வருமாறு விபரம் காண்க.

ஆகாசம் முதலான ஐந்து பூதங்களையும் ஒவ்வொன்றையும் முந்தி ஸமமான இரண்டு பாகமாகச்செய்து கொள்ளவேண்டும். அவ்விதம் செய்தால் பத்துப்பாகங்களாகும். அவைகளில் முறையே ஆகாசம் முதலியவைகளின் ஐந்துபாகங்களைத்தனியாகவைத்துவிட்டுப் பாக்கியுள்ள ஐந்து பாகங்களிலுள்ள ஒவ்வொன்றையும் நான்கு பாகங்களாகப் பிரிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் ஒவ்வொரு பூதங்களுக்கும் வேறாக வைத்திருப்பது அரைப் பாகம்போக, பாக்கியைப் பிரித்ததில் நான்குபாகங்களிருக்கின்றன. இந்நான்கிலும் ஆகாசத்தின் பாகமான நான்கை ஆகாசத்தை விலக்கிவிட்டு பாக்கியிருக்கும் நான்கு பூதங்களுடைய பிரித்து வைக்கப்பட்ட நான்கு அரைப் பாகங்களோடு ஒவ்வொன்றாகச் சேர்த்துவிட்டால் நான்கிற்கும் ஸரியாய்விடும். இவ்விதம் ஒவ்வொரு பூதத்தினுடைய நான்கு பாகங்களையும் அதைவிட்டு பாக்கியுள்ள நான்கு பூதங்களுக்கும் ஒவ்வொருபாகமாகச் சேர்த்துவிடவேணும். இவ்விதம் சேர்த்தால் ஒவ்வொரு பூதத்திற்கும் மற்றுமுள்ள நான்கு பூதங்களுடைய நான்கு பாகங்களும் தன்னுடைய பாதிபாகமும் சேர்ந்து பூர்ணமாகஆகி ஒவ்வொருபூதமும் பஞ்சபூதங்களின் அம்சங்களையுடையதாக ஆகின்றது. அதில் எட்டில் நான்குபாகம் தன்னுடையதும் எட்டிலொருபாகம் ஒவ்வொருபூதத்தினுடையதும் சேர்ந்து பூர்த்தியாகின்றது. இவ்விதம் சேர்க்கப்பட்டவைகளுக்குத்தான் பஞ்சீகிருத பூதங்களென்றுபெயர்.

பஞ்சீகரண விபரம்.

1-ஆகாயம்.	2-வாயு.	3-அக்னி.	4-அப்பு.	5-ப்ருதிவீ.
ஆகாயம் $\frac{1}{2}$	வாயு $\frac{1}{2}$	அக்னி $\frac{1}{2}$	அப்பு $\frac{1}{2}$	ப்ருதிவீ $\frac{1}{2}$
வாயு $\frac{1}{8}$	அக்னி $\frac{1}{8}$	அப்பு $\frac{1}{8}$	ப்ருதிவீ $\frac{1}{8}$	ஆகாயம் $\frac{1}{8}$
அக்னி $\frac{1}{8}$	அப்பு $\frac{1}{8}$	ப்ருதிவீ $\frac{1}{8}$	ஆகாயம் $\frac{1}{8}$	வாயு $\frac{1}{8}$
அப்பு $\frac{1}{8}$	ப்ருதிவீ $\frac{1}{8}$	ஆகாயம் $\frac{1}{8}$	வாயு $\frac{1}{8}$	அக்னி $\frac{1}{8}$
ப்ருதிவீ $\frac{1}{8}$	ஆகாயம் $\frac{1}{8}$	வாயு $\frac{1}{8}$	அக்னி $\frac{1}{8}$	அப்பு $\frac{1}{8}$

இவ்விதமே:—

द्विधा विधायचैकैकं चतुर्धा प्रथमं पुनः ।
स्वस्वेतरद्वितीयांशैर्योजनात्पञ्चपञ्च ते ॥

என்று ஒருமஹானாலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஐந்து பூதங்களிலும் ஒவ்வொன்றிலும் பஞ்சீகரணத்தால் ஐந்தும் சேர்ந்திருந்தாலும் தன்தன் பாகம் அதிகமாகயிருப்பதைக்கொண்டு பிரதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசமென்று தனியாயிருக்கும் ஸமயத்தில்போல இப்பொழுதும் அந்தந்தப் பெயரால் வியவகரிக்கப்படுகின்றன.

பஞ்சீகரணஸமயத்தில் ஆகாசத்தில் சப்தமென்கிற குணமும் வாயுவில் சப்தம் ஸ்பர்சம் என்கிற இவ்விரண்டு குணங்களும் அக்னியில் சப்தம், ஸ்பர்சம் ரூபம் என்கிற இம்மூன்றுகுணங்களும் ஜலத்தில் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் என்கிறஇந்நான்கும் பூமியில் சப்தம், ஸ்பர்சம்,ரூபம், ரஸம்க, ந்தம் என்கிற இந்த ஐந்து குணங்களும் உண்டாகின்றன.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

உபாகன்மம்.

ஆரியர்களே! உலகில் ஒரு விஷயத்தைப் புதிதாய் உரைத்தால் மட்டிலும் ஜனங்களுக்குப் பிரீதியுண்டாகுமேயன்றி சொன்னதையே திருப்பித்திருப்பி ஒருவன் கூறுவானுயின் அவன் பித்தனுவான். அவனது வசனம் எற்கப்படமாட்டாதென்பது உலகறிந்ததே. ஆயினும் சொன்னதையே சொல்வதில் பயனுண்டென்றும் சிலரேற்றுக்கொண்டிருக்கின்றனரென்றும் அப்படிச் செய்வதில் அனுகூலமான மாறுதல் காணப்படுகிறதென்றும் கொண்டு மீண்டும் இங்கு உபாகன்ம விஷயத்திலிறங்குகின்றேன்.

இவ்விஷயமாய்ச் சென்ற வருடத்திலும் அதற்கு முன்வருடத்திலும் இப்பத்திரிகையிலேயே என்னுலும் மற்ற பண்டிதர்களாலும் வரையப்பட்டிருக்கிறது. அதிலும் அவ்வருடங்களில் கிரமமாய் சிராவண மாஸத்திற் செய்யப்படவேண்டிய உபாகன்மாவிற்கு எந்ததோஷமேற்பட்டுப்பிரோஷ்டபதத்திலும்ஆஷாடத்திலும் செய்ய நேர்ந்ததோ, அதே தோஷமே ஒவ்வொருவருடத்திலும் நேர்கிறதென்பது கவனிக்கத்தக்கது. இவ்வருடத்திலும் சிராவண பௌர்ணமீ தினமாகிய ஆடிமாதம் 20ம் தேதியன்று கிரஸ்தோதய சந்திரகிரகணம் எற்படுகிறது. ஆகவே,

मलमासे निपतिते सूतके मृतकेऽपि वा ।
ग्रहणे संक्रमे वापि मौढ्येऽपि गुरुशुक्रयोः ।
प्रोष्ठपद्यामथाषाढ्या मुपाकरणमिष्यते ॥

“மலமாஸமாவது ஜனனமரண சௌசமாவது கிரகணமாவது குருசுக்ரமௌட்டியமாவது உபாகர்மகாலத்தில் நேர்ந்தால் பிரோஷ்டபதியிலாவது ஆஷாடியிலாவது உபாகர்மத்தைச்செய்யவேண்டும்” என்ற வஸிஷ்டரது வசனப் பிரமாணத்தை அனுஸரித்து ஷெ சிராவண பூர்ணிமாதினமான ஆடிமாதம் 20ம் தேதியில் உபாகர்மம் செய்யக்கூடாதென்பதே சாஸ்திர சித்தாந்தம். இவ்விதம் தோஷம் நேர்ந்தகாலங்களில் உபாகன்மம் செய்யக்கூடாதென்றே மடாதிபர்களும் பண்டித கோஷ்டிகளும் தீர்மானம் கொடுத்திருக்

கின்றனர். இத்தீர்மானங்களை அலக்ஷியம் செய்துவிட்டு கட்டில்லாமற் பேசிக்கொண்டு இஷ்டப்படி நடப்பவர்களுக்கு இந்த விஷயம் காதிலேறாதாயினும் ஆஸ்திகர்களான சிரத்தாள்களுக்காக மட்டிலும் மீண்டும் இவ்விஷயத்தை இவ்வருடத்திலும் சுருங்கச் சொன்னேனாதலபற்றி ஆஸ்திகர்களான போதாயனிகள் இவ்வருடம் ஆனிமாத பூர்ணிமையிலும் ஆபஸ்தம்பிகள் ஆவணிமாத பூர்ணிமையிலும் உபாகன்மாவை அனுஷ்டித்துக் கிருதார்த்தர்களாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

குறிப்பு:—இவ்விஷயமாய் ஏற்படும் எவ்விதமான சந்தேகத்திற்கும் சென்றவருஷ ஸஞ்சிகைகளில் விஸ்தாரமாய் விடையளித்திருப்பதால் மீண்டும் அவ்விதமான சிரமத்தையே இவ்வருடமும் நம் பத்திரிகா நேயர்கள் கொடுக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

உபபத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் வருடோத்ஸவம்.

மதுரைமாநகரில் தமிழ்ச் சங்கம் ஒன்றிருப்பதை யாவரும் அறியக்கூடும். இப்பட்டணத்தில் இச்சங்கம் ஸ்தாபிதம்பெற்று பல வருடங்களாகின்றன. இம்மதுரை நகரே தமிழ் மக்களுக்குப் பிறந்தவிடமெனலாம். இத்தமிழ்ப் பாஷையை ஆதியில் இலக்கணத்துடன் வளர்த்த அகஸ்தியமாமுனிவரும் வடகோடியிலிருந்து பாண்டியநாட்டின் தென்கோடிக்கு வந்த பின்னர்தான் திராவிட ஸூத்திரம் இயற்றினர். இதை இயற்ற ஏகாந்தமாய் தவம் புரிந்த இடத்தையே இப்போது அகஸ்தியகூடமென்பர். இங்கு ஆலவாயனான பரமசிவனே தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தி அதில் தான் அக்கிராசனம் அமர்ந்தனரென்றும் தமிழறிஞர் விஸ்தாரமாய்க் கூறுவதுண்டு. ஹாலாஸ்ய மாகாத்மியத்திலும் நற்கீரு

டன் தமிழில் ஈசனே வாதுபுரிந்ததாய்க் கதையுமுண்டு. இத்தகைய அனுதிஸித்தமான நம் தமிழ்ப்பாஷை நாளுக்குநாள் குன்றி வருவதைக்கண்டு மனமெலிந்து பல தமிழறிஞ் செல்வவந்தர்கள் இத்தேய்வைச் சகியாது ஈசனருளை முன்னிட்டு இந்நகரமே நந்நகரமென்றுகருதி இத்தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபிக்கலாயினர். அது முதற்கொண்டு அதன் மெலிவு பறந்துபோய் நாளுக்குநாள் போஷணைபெற்று நம் தமிழ்க்கலை முன்னுக்கு வந்துகொண்டிருப்பதையும் இதுகாறும் அதனலேற்பட்ட பலனையும் இனியும ஏற்படப்புகும் செழிப்பையும் அச்சபையின் வருடாந்தர அறிக்கை மூலம் அறியலாமென்றுகொண்டு இங்கு அதனை வளர்க்கவில்லை. அத்தகைய சங்கத்தின்வருடோத்ஸவம் 8—6—25ல் மதுரை ஸேதுபதி உயர்தரக் கலாசாலை மண்டபத்தில் கனம் ஸர். C. P. ராமஸ்வாமி அய்யரவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பெற்றது. அன்று தமிழபிமானிகளும் மற்றுமுள்ள பிரபுக்களும் கட்டடத்தில் ஏராளமாய்க் குழுமியிருந்தனர். அங்கு தமிழறிஞ் சிங்கங்கள் செய்த உபன்யாஸ வைபவங்களையும் அக்கிராஸனர் தமிழைப்பற்றிப் புகழ்ந்ததையும் விசேஷமாய் தினசரிப் பத்திரிகைகளின் மூலமாய் அறிந்திருக்கலாமாதல்பற்றி மீண்டும் அதனையே ஒப்புவிக்க இங்கு இறகு ஏந்தவில்லை. மற்று விசேஷமாய் அன்று இங்கு நடந்த வைபவம் ஒன்றையே குறிப்பிட முன்வருகிறேன். இத்தகைய நம் தமிழ்நாட்டில் அப்பாஷையிற் கரைகண்டவர்களும் அறிதற்கரிதாய பல நூல்கள் துருப்பிடித்து மூலையிற்கிடந்த ஏட்டுச் சுவடிகளைப் புரட்டி எடுத்துத் தட்டிப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதையே வாழ்நாளுக்குப் பலனெனக் கருதிப் பாடுபட்டுழைத்து அவைகளைப் பணச்செலவையும் தேகசிரமத்தையும் புத்திசிரமத்தையும் கருதாது அச்சிற்பதிப்பித்து வெளியேற்றினவர்களும் தமிழ்க்கடலில் ஆழ்ந்து அநேக அறியாதன நூல்களைப் பாமரர்களும் அறியுமாறு செய்தவர்களும் மஹாமஹோபாத்தியாயர் என்று நம் ராஜாங்கத்தாரால் பட்டம் அளிக்கப் பெற்றவர்களுமான சாமிநாத அய்யரவர்களென்பாரை அறியாத தமிழ் மக்களுமுண்டோ? இம்மகா பண்டிதோத்தமரான அய்யரவர்கள் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் வெகு

காலம் தமிழ்ப்பண்டிதர் ஸ்தானத்தை வகித்துவிட்டு சிறிதுகால மாய் உபகாரச் சம்பளமென்ற பென்ஷன் பெற்று ஏகாந்தமாய் லோகஹிதமான காரியங்களைச் செய்துகொண்டு தஞ்சை ஜில்லா வில் தனது கிராமத்தில் வசித்துவருகின்றனர். இம்மகான் பிரதி வருடமும் இச்சங்க மகோத்ஸவத்திற்கு வருவதுபோல் இவ்வரு டமும் ஊக்கத்துடன்வந்து சபையை அலங்கரித்தனர். இந்த அய்யரவர்கள் தன் இளம் வயதில் லோகோபகாரத்தைக் கருதி தமிழ் விஷயமாய் அரும்பாடுபட்டுப் பொருட்செலவையும் கரு தாது நடந்துவந்ததை யாவரும் அறிந்தபடியால் வார்த்தக தசை யில் சற்று சிரமமடைய நேரிடுமோவென்று அநேக தமிழபிமானி கள் கவலையுற ஆரம்பித்தனர்.

அதை அநுஸரித்து மதுரையில் ஹைகோர்ட்வக்கீல் மகா-ள -ள-ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாஸய்யங்கார் முதலிய தமிழறிஞப்பிரபுக் கள் முயற்சிசெய்து அய்யரவர்கள்வார்த்தகதசையிலும் இல்லறக் கவலைபற்று சுகமாய் வாழ்நாளைக்கடத்தி முன்போல் லோகோப காரதர்மத்திலேயே ஈடுபட்டுய்யுமாறு சில முயற்சிகளைச்செய்து அநேக தர்மசிந்தையுள்ள பிரபுக்களிடமிருந்தும் தேனீ தேன் கூட்டுவதுபோல் மெதுவாய்ச்சில துகைபணத்தின் முடிப்பைச் சேகரித்தனர். அவ்விதம் சேகரித்த பணத்தின் துகைமுடிப்பை அன்று சங்கத்தின் முன்னிலையில் அய்யரவர்களின் அரியகுணங் களை விஸ்தரித்தெடுத்துக்கூறி அழகிய பட்டுப்பையில் அத்துகை யை முடிப்பிட்டு அக்கிராஸனர்மூலம் அம்முடிப்பை அய்யரவர் களிடம் சமர்ப்பித்தனர். அச்சமயம் அச்சன்மானத்தைக்கண்டு மனமாறச் சந்தோஷம்கொள்ளாத ஜீவஜந்துவே அம்மண்டபத் திற்கிடையாதெனக் கூறலாம். அம்முடிப்பில் அப்போதிருந்த பணம் ரூபாய் ஐயாயிரம்(5000) இன்னும் அதிகமாயும் வரவேண் டியதிருக்கிறதென்று பிரஸ்தாபம். சாமான்யமாய்இத்துகை பெரி தென்றாலும் அய்யரவர்கள்பாட்டிற்கு இது கோடியில் ஒருபங் கும் ஈடாகாதென்பார்களாயினும் ஏதோ இக்காலத்தில் இவ்வள வாவது உபகரிக்க முன் வந்ததற்காக இம்முயற்சியில் பாடுபட்ட T. C. அய்யங்கார் முதலியவர்களுக்கும் துகைகொடுத்துதவிய தனவான்களுக்கும் ஆலவாய் எம்பெருமான் பூர்ணானுக்கிரகம்

செய்யவேண்டுமென்று நாம் மனமாரப் பிரார்த்திப்போம். இச்சமயத்தை அனுஸரித்து அழகாயும் லோகோத்தரமாயும் நடந்தஓர் அற்புதத்தை இங்கு முன்னமேயே சொல்லாமற்போயினும் இங்காவது ஞாபகத்துடன் சொல்லவேண்டியது அவச்யம். ஆகவே முக்கியமான அவ்விஷயத்தை இங்கு வெளியிடுகிறேன். இவ்விதம் அய்யரவர்களுக்குச் செய்யப்புகும் மரியாதைவிஷயத்தைக் கேழ்வியுற்ற லோகாசார்யர்களான ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபர்களான சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் அய்யரவர்களின் குணாதிசயங்களைப் பூரணமாய்அறிந்து அன்னவர்கட்கு "தாக்ஷிணாத்ய கலாநிதி" என்ற ஓர் பட்டம்கொடுத்து அவர்களின் சாமர்த்தியத்தைப் பற்றிவியந்து ஸ்ரீ முகமும் 100 ரூபாய்கட்குமேல் மதிப்பிடக்கூடிய சால்வைகள் இரண்டும் ஐந்து பவுனுக்குறையாதெனமதிப்பிடக்கூடிய கங்கணமும் அதில்தாக்ஷிணாத்யகலாநிதி என்று பெயரும் விலையுயர்ந்த பௌண்டன்பேனாவின்மேல் ஒருபவுன் தங்கத்துக்குக் குறையாமல் தாக்ஷிணாத்யகலாநிதி என்று தங்க எழுத்துச் செதுக்கப்பட்டபேனாவும் அய்யரவர்களுக்குஅனுக்கிரகித்தனுப்பப்பட்டிருந்தன. இவைகளை அம்மகாஸபையில் எடுத்து வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமுகம் வாசிக்கப்பட்டபின்னர் நீண்டகாகோஷத்தினிடையே அக்கிராஸனர் அய்யரவர்களிடம் ஸமர்ப்பித்தனர். இச்சமயம் அய்யரவர்களின் அதிர்ஷ்டத்தையும் அவர்களின் வித்வத்தன்மைக்குத்தக்கவாறு ஸ்ரீ லோகாசார்யரவர்கள்செய்த அரிய ஸன்மானுனுக்கிரகத்தையும்பற்றிப் பலர் புகழ்ந்தனர். இதனால் தேசபாஷையையோ ஸம்ஸ்கிருதத்தையோ படித்தவனுக்குப்பிழைக்க வழிஇல்லை என்பது வீணாயிற்று. பூர்ணமாய்ப்படித்த பண்டிதன் எவனும்கஷ்டமடையமாட்டானென்பது தெற்றெனவிளங்கிற்று. இவ்விதமே சில காலத்திற்குமுன் கும்பகோணத்தில் விளங்கிக் கொண்டிருந்த மகாமகோபாத்தியாய பண்டித கணபதிசாஸ்திரிகளவர்கள் சாஸ்திரங்களில் மிகத் தேர்ச்சிபெற்று அவதார புருஷரெனக் கொண்டாடப்பெற்றிருந்தனர். அம்மகான் திடீரென திவ்யஸித்தி பெற்றுவிட்டபோதிலும் அவரது குடும்பத்திற்காக ப்ரொபெஸர் K. சுந்தராமய்யரவர்கள் முதலிய ஆஸ்திகர்கள்

பணம் சேகரித்துத்தக்கவாறு உபகரித்தனரென்று கேழ்விப்பட்டிருக்கிறோம். ஆகவே இத்தமிழ்ச்சங்கம் நமக்கு போதிப்பதென்னவென்றால் தேசபாஷையையும் ஸம்ஸ்கிருதத்தையும் பூரணமாய் சிரமத்துடன் சிரத்தையாய்ப்படிக்க வேண்டுமென்பதே. இத்தகையசபை நீடூழிகாலமிருந்து பிராசீன வித்வத்தைப் பெருக்கவேண்டுமென்று ஈசன் அருள் புரிவாராக.

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

श्रीनीलकण्ठमहागुरवे नमः ॥

ஆரோக்யம்.

அனேகமாய் முன்காலத்தில் शतमानं भवति शतायुः पुरुषः என்ற வேதவாக்யப் பிரமாணத்தை அனுஸரித்து மனிதர்கள் வியாதிகளற்றவர்களாய் சற்றேறக்குறைய நூறுவயது பர்யந்தம் ஜீவித்திருந்தார்கள். இப்பொழுது மனிதர்களுக்கு அதிபால்யத்திலே பால்யம் கௌமாரம் யௌவனம் வார்த்தக்யம் என்னும் நான்கு அவஸ்தைகளும் முடிவதுடன் அனேக வியாதிகளாலும் பிடிக்கப்படுகிறார்கள். இவைகளுக்குக் காரணத்தை யோஜிக்குமளவில் சுகாதாரமே முக்கியமாகும். சுகத்திற்கு ஆதாரம். ஆதாரமென்றால் இருப்பிடமென்பது பொருள். சுகத்திற்கு இருப்பிடம் நமக்குச் சரீரமே. அச்சரீரத்திற்கு எவ்வித நோய்களுமணுகாமல் அதற்கு வேண்டிய உபாயங்களையும் தேடி சுகமாக வாழ்வதே பலமாகும். முன் காலத்தில் நமது பெரியோர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததும் நமது வேத சாஸ்திரங்களில் உபதேசிக்கப் பட்டதுமான தினசர்யையிலிருந்து நழுவினதே நமக்கு வியாதிகளிக்கு முக்கிய காரணமாகிறது. வாத பித்த கபங்கள், ஜாடராக்னி, ரஸதாதுக்கள், மலங்கள் இவைகள் ஸமமாயும் இந்திரியங்கள் மனஸ்ஸு இவைகள் பிரஸன்னமாயுமிருந்தால் நாம் ரோகமற்றவர்களென்றும் இவைகளில் விகல்ப

மிருந்தால் நாம் ரோகிகளென்றும் ஆயுர்வேதம்கூறுகிறது. இவை களைச் சரியாக ரக்ஷிப்பதற்கு தினசர்யை உபாஸிக்க வேண்டியது அவச்யமாகும். தேகாரோக்யத்தைவிரும்புகிறவர்கள்பிரதிதினமும் அதிகாலையில் ஸூர்யோதயத்திற்கு முந்தியே நித்திரையை விட்டெழுந்திருந்து முகத்தை சுத்தம்செய்துகொண்டு கண்ணாடி பில்வம், துளஸி, பசு, முதலியவஸ்துக்களை தர்சனம்செய்து பகவன் நாமாவை ஸ்மரித்த பிறகு கால் நடையாக கொஞ்சதூரம்சென்று மலமூத்திர விஸர்ஜனம் செய்த பிறகு சுத்தமான மண்ணைக் கொண்டு அனேகம் தடவை சுத்தம் செய்துகொள்ளவேண்டும். பிறகு தந்ததாவனத்தை நன்றாக விதிப்படி அனுஸரிக்கவேண்டும்.

ब्राह्मे मुहूर्ते चोत्थाय स्वस्थो रक्षार्थमायुषः ।
शरीरचिन्तान्निर्वर्त्य कृतशौचविधिस्ततः ॥
अर्कन्यग्रोधखदिरकरञ्जककुभादिकम् ।
कारयेद्दन्तधवनं दन्तमांसान्यबाधयन् ॥

அதிகாலையிலெழுந்திருந்து ஜலமலங்களைக் கழித்துவிட்டு சுசியாக தந்ததவனம் செய்யவேண்டும். பற்களைச் சுத்தம்செய்ய, எருக்கு ஆலம்விழுது, கதிரக்குச்சி, சிறுபில்வம், தும்பவேர், மாலதி, காவீரகுச்சி, இவைகள் மிகச்சிறந்தன. விடியற்காலம் யெழுந்திருந்து இங்கு கூறப்பட்ட குச்சிகளில் ஏதாவதொன்றினால் பற்களுக்கும் அவைகளைப் பிடித்துக்கொண்டிருக்கும் மாம்ஸங்களுக்கும் யாதொரு இடையூறின்றி சுத்தம் செய்யவேண்டியது என்று ஆயுர்வேதம் கூறுகிறது.

ब्राह्मे मुहूर्ते बुध्येत धर्मार्थमनुचिन्तयन् ।
कायक्लेशांश्च तन्मूलान वेदतत्त्वार्थमेव च ॥

ப்ராம்ம முஹூர்த்தமென்பது இரவில் நான்காவது யாமம்.

रात्रेस्तु पश्चिमे यामे मुहूर्तो ब्राह्म उच्यते ॥ जाबालिः ।

ஆகையால் விடியற்காலத்தில் யெழுந்திருந்து தர்மம் அர்த்தமென்கிற புருஷார்த்தங்களை ஸ்மரித்துக்கொண்டும் தர்மார்த்தார்

ஜனஹோதுக்களான சரீர சிரமத்தை நினைத்தும் ஸர்வேச்வரனான பரமாத்மாவைத்யானம் செய்துகொண்டும் எழுந்திருக்க வேண்டுமென்கிறார்.

கீழ்சொன்ன வைத்தியமுறைகளை மனதில் கருதி அதிகாலையில் படுக்கைவிட்டெழுந்திருக்கவேண்டும். இல்லாவிடில் தோஷமுண்டென்பதையும் கூறுகிறார்:—

ब्राह्मे मुहूर्ते सेवेतां शयने यत्र दम्पती ।
श्मशानतुल्यं तद्वेश्म पितृभिः परिवर्ज्यते ॥
प्रत्यूषकाले निद्रां च कुरुते सर्वदा तु यः ।
अशुचिं तं विजानीयादनर्हं सर्वकर्मसु ॥

விடியற்காலங்களில் எந்த வீட்டில் தம்பதிகள் உறங்குகிறார்களோ அந்தவீடானது சுடுகாட்டுக்குச் சமானமென்றும் அவர்களுக்கு சுசி என்பதே கிடையாதென்றும் சர்வகர்மாவினின்றும் விடுபட்டவனாக ஆகிறானென்றும் இந்த ஸ்மிருதி கூறுகிறது—ஆகையால் சரீரசுத்தியைச் செய்துகொள்ள வேண்டியதவச்யம். இல்லாவிடில் நோய்களணுகக்காரணமாய்விடும். நோய் அணுக அநேகம் காரணமிருந்தபோதிலும் மனுஷ்ய தேகத்தில் உண்டாகுமனேக ரோகங்களுக்கும்மலபந்தமே முக்யகாரணமாகும்—மலபந்தமுண்டாவதற்கு அநேக காரணங்களிருந்தபோதிலும் முக்கியமாக தற்காலத்திய நவீனநாகரீகப் பழக்கங்களேயாகும்—கிரமமற்ற ஆகாரதோஷங்களினால் உண்டாகும் வியாதி ஸம்பவங்களனந்தம். அவைகளில் சிலவற்றை மட்டில் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கவை—அஜீரணம், அக்னி,மாந்தியம், குடல்புளிப்பு, பித்தவாயு, பழையமலத்தில் உண்டாகும் கிருமிகள், சிருகுடல்களை அறுத்து பொத்தலிடுவதாலுண்டாகும் ஜீர்ணகாலத்து வயிற்றுவலி, இடுப்புவலி, மார்வலி, முதுகுவலி, தலைவலி முதலியகொடிய நோய்களுண்டாகிறதென்று வைத்திய சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஆகையால் மலபந்த தோஷமேற்படாமல் சரீரத்தைப் பாதுகாற்றுக்கொண்டால்—திருடர்கள் வராமல் உயர்ந்த மதியில் எடுத்துக்கொண்டதுபோலாகும். ஆகையால் மலபந்தத்தைத் தடுக்க

முயலுபவர்கள் நவீன ஆகாரப்பழக்கங்களைமாற்றி நமது பூர்வீக பழக்கத்திற்குக்கொண்டுபோகவேண்டும். காலைவேளைகளில்குளிர்ந்த ஆகாரங்களைஉட்கொள்ளவேண்டும். தவிரவும்மலபந்தமுடையவர்கள் நாகரீகமாய் தற்போதுபயோகிக்கும் மாத்திரைகளை உபயோகிப்பதை நிறுத்தி பிஞ்சுக்கடுக்காய் ஷை சூர்ணம் அல்லது கடுக்காய் சூர்ணம் முதலிய பிராசீனமாயுள்ள மருந்துகளை உபயோகிக்கவேண்டும். உபயோகித்தால் எவ்விதத்திலும் மலபந்தத்திற்கு இடங்கொடாது. அதிகாலையில் எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு ஸ்நானம் செய்துவிட்டு நித்திய கர்மாக்களை யதோக்தமாய் நடத்திவரவேண்டியது.

மனிதனானவன் உடை, சரீரம், வாக்கு, வித்யை, விநயம் இவைகளை யுடையவனாக இருக்கவேண்டும். இல்லாவிடில் கௌரவமடையமாட்டானென்று வடமொழியில் கூறுவார்கள்.

वस्त्रेण वपुषा वाचा विद्यया विनयेन च ।
वकारैः पञ्चभिर्हीनः नरो नायाति गौरवम् ॥

ஆகையால் அதிகாலையில் எழுந்திருந்து சரீரசுத்திசெய்துகொண்டு ஸ்நானம்செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

(2) ஸ்நானம்.

உதயகாலத்தில் ஸ்நானம் செய்வது அதிக தேகாரோக்கியமென்பது ஜனங்களுக்குப்பிரசித்தமாய்த்தெரிந்தவிஷயமே ஸ்நானமென்பது முக்கியமாய் ஹிந்துக்களால் அடிக்கடி ஆசாரத்திலும் அனுபவத்திலும் கையாளப்பட்டு வருவதுடன் இப்பொழுது மேல்நாட்டு ஜனங்கள் தேகாரோக்கியத்தை உத்தேசித்து உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்நானங்களில் அநேக விதங்களுண்டு. அதில் சிரஸ்நானம் (மூழ்குதல்) செய்கிறதுதான் விசேஷம். சிரஸ்நானம் செய்யுங்காலத்தில் சீதஜலத்தையும், கண்டஸ்நானம் செய்யுங்காலத்தில் உஷ்ணஜலத்தையும் உபயோகிப்பது விசேஷம். உஷ்ணஜலத்தில் சிரஸ்நானம் செய்தால் கண்களுக்குக் கெடுதலென்றும், சீதஜலத்தில் சிரஸ்நானம் செய்தால் கண்களுக்கு மிகவும் அனுகூலமென்றும் ஸூச்

ருத ஸம்ஹிதை கூறுகிறது. ஆனால் உஷ்ணோதகத்தில் ஸ்நானம் செய்யவேண்டிய சில சந்தர்ப்பங்களில் அதிக உஷ்ணமிராமல் சுகோஷ்ணமாக இருக்கும்படியான ஜலத்தை உபயோகிக்கவேண்டும். ஸ்நானம் செய்யும்பொழுது சரீரத்தின் அழுக்கை நன்றாகத் தேய்த்து சரீரதாபம் அடங்கும்படி நிதானமாய் ஸ்நானம் செய்ய வேண்டும். இந்தப் பிரபாவத்தைத் தெரிந்துகொண்டுதான் நமது பெரியோர்கள் ஆசாரதோரணையில் அடிக்கடி ஸ்நானம் செய்து கொண்டு வியாதிகளற்றவர்களாக விளங்குகிறார்கள்.

ஸ்நானத்தின் பலன்கள்,—

दीपनं वृष्यमायुष्यं स्नानमूर्जबलप्रदम् ।
गण्डूमलश्रमस्वेदतद्राद्दाहपाप्मजित् ॥

ஸ்நானத்தின் பிரபாவத்தால் ஆயுள் விருஷ்யம், காலத்தில் பசி ஏற்படுகின்றது. அதாவது, ஸ்நானம் செய்தால் மனிதனுக்கு ஓர் சந்தோஷம் உண்டாகிறது. அதை நாமும் கண்டு ஆனந்திக்கிறோம்.

சந்தோஷத்தினால் விருஷ்யத்வம்,—

यत्किञ्चिन्मधुरं स्निग्धं स्नानमूर्जफलप्रदम् ।
मनसो हर्षणं यच्च तत्सर्वं वृष्यमुच्यते ॥ என்றார்

ஸ்நானத்தினால் தீபனமாவது, நித்ராகாலத்தில் ஜாடராக்னியின் ஜ்வாலைகள் மயிர்க்காம்புவழியாகவும், கண்கள்வழியாகவும் வெளிக்கிளம்பிவிடுகிறது. ஸ்நானமாவது அந்த ஜ்வாலைகளைத்தடுத்து வெளியில் ஜ்வாலைவிட்டெரியும் ஜாடராக்னியை அணைத்துச் சரீரத்திற்குள் வைத்து அதை விருத்திசெய்கிறதாம். அதனால் தீபனம் பொருந்துகிறது. இன்னும் ஸ்நானமாவது தோலை அடைந்த தான (भ्राजका) பிராஜகா என்னும் பித்தத்தை உட்கொண்டுவைத்து ஊஷ்மாக்களை விருத்திசெய்துவருகிறது. சரீரசம்பந்தமான அநேக குணங்களேற்படுகிறது என்று வைத்திய சாஸ்திரம் கூறுகிறது. அவ்விதமே தர்மசாஸ்திரங்களும்,—

प्रातस्तु दन्तकाष्ठं वै भक्षयित्वा विधानतः ।
आचम्य प्रयतो नित्यं प्रातः स्नानं समाचरेत् ॥ कूर्मपुराणे ।

அதிகாலையில் எழுந்திருந்து தந்ததாவனம் ஆசமனம் இவைகளைச் செய்து ப்ராதஸ்நானம் செய்யவேண்டுமென்று கூறுகிறது.

रहस्याचरितात्पापान्मुच्यते स्नानमाचरन् ।
मनःप्रसादजनकं रूपसौभाग्यवर्धनम् ॥
शोकदुःस्वप्नहं स्नानं मोक्षदं ह्लादनं तथा ।
स्नानमूलाः क्रियास्सर्वाः श्रुतिस्मृत्युदिता नृणाम् ।
तस्मात्स्नानं निषेवेत श्रीपुष्ट्यारोग्यवर्धनम् ॥

அதாவது, அடையக்கூடாத வஸ்துவை அடைந்திருந்தாலும், திருடி இருந்தாலும், பிரதிக்ரஹ நிமித்தமானாலும், ரகஸ்ய நிமித்தமான பாபங்களிலிருந்தும் பிராயச்சித்தம் செய்து காவேரி முதலியவைகளில் ஸ்நானம் செய்துவிட்டால் பாபங்கள் தொலைந்துவிடுகிறது. இன்னும் மனதிற்கு சந்தோஷமும் ரூபங்களும் விருத்தியடைகிறது. சோகம், துஸ்வப்னம் இவைகள் தொலைகின்றன. மோக்ஷமடையலாம்,—

बलं रूपं यशो धर्मं ज्ञानमायुस्सुखं धृतिम् ।
आरोग्यं परमाप्नोति सम्यक्स्नानेन मानवः ॥

ஸ்நானத்தினால் மனுஷ்யர்களுக்கு அடையக்கூடியவைகள் பலம், அழகு, கீர்த்தி, தர்மம், ஞானம், ஆயுள், சுகம், பொறுமை இவைகளே.

மேலும், சரீரத்திற்கு அழகையும், பலத்தையும் கொடுத்து தோல்சம்பந்தமான வியாதிகளைக் கண்டித்து, மகாலக்ஷ்மியின் கடாக்ஷத்தை உண்டுபண்ணுவதற்காக மஞ்சள் முதலிய ஆரோக்கிய வஸ்துக்கள் ஸ்நானத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதமிருக்க, சிலர் ஷை ஆரோக்கிய வஸ்துக்களைவிட்டு நவீனமான

தும். அனுசார வஸ்துக்களால் தயார் செய்யப்பட்டதுமான சில ஸோப்புகளை உபயோகித்துக்கொண்டு விதிப்படி ஸ்நானத்தை அனுசரிக்காமல் அநேகம் ரோகங்களை சம்பாதித்துக் கொள்கிறார்கள். ஆகையால் பெரியோர்களைப்போல் ஸ்நானவிதிகளையனுஷ்டிப்பவர்களுக்கு பசி, தீபனம், விருஷ்யம், ஆயுள், சரீரகாந்தி, சிரமநிவர்த்தி இவைகள் உண்டாவதுடன் சகல ரோகங்களையும் போக்கடித்து சகல பாபங்களையும் நிவர்த்திசெய்துவிடுகிறது

முற்காலத்தில் ஸ்நானம் செய்த பிறகு பெரியோர்கள் வர்ணாச்ரமத்திற்குத் தக்கபடி அவரவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் ஸூர்ய நமஸ்காரம் பூஜை முதலியதான ஸத்காரியங்களையும் குடும்பசம்பந்தமான கிருஹகிருத்யங்களையும் யதோக்தமாய் நடத்திவந்தபடியால் அவர்களுக்கு வியாயாமம் என்ற தேகப்பயிற்சி அனாவசியமாகவே இருந்தது. முற்காலத்தில் பெரியோர்கள் ஜபதபாதிகளையும், சரீர பலத்திற்குத் தக்கபடி தோட்டம் கிருஷி முதலிய குடும்பவேலைகளையும் செய்துகொண்டு அதனால் ரோகமற்றவர்களாகவும் விசேஷ பலவான்களாகவும் இருந்தார்களென்பது நமது செவிகளுக்கெட்டிய விஷயமேயாகும். இப்பொழுது அநேகர் ஷை ஸத்காரியங்களை விட்டுவிட்டு கஸரத்து தேகப்பயிற்சி செய்கிறேனென்று இரும்புக்குண்டுகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு பூர்வஜன்மங்களில் கடன்பட்டவர்களைப்போல் சுமக்கிறார்களே அதைக்காட்டிலும், நமது குடும்பவேலைகளையும் சூர்ய நமஸ்காரம் போன்றதுமான ஸத்காரியங்களையும் கலந்து தேகப்பயிற்சி எடுத்துக்கொள்ளும்பக்ஷத்தில் அது அளவற்ற தேகபலத்தைக் கொடுத்து ரக்ஷித்துவிடுமாதலால் பால்யர்கள், விருத்தர்கள், இன்னும் சில ரோகிகள் தவிர இதரமான சகலரும் தேகம், பிரகிருதி, சரீரபலம் இவைகளுக்குத் தக்கபடி தேகப்பயிற்சியை அனுசரிக்கும்பக்ஷத்தில் சரீரத்திற்கு சுகமும் உத்ஸாகமுங்கூடின பரபரப்பும், அவயவங்களுக்கு விசேஷபுஷ்டியும், பசி,தீபனம் முதலிய அநேக குணங்களும் உண்டாகின்றன.

(தொடரும்)

K. R. வைத்தினாத சாஸ்திரிகள்.